இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 01-03-2024

# அந்த மோடியா ? இந்த லேடியா ? - 1

இரண்டு மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகிறது. இரண்டு முறை வெற்றி பெற்று பிரதமர் ஆனவர், தனது பத்தாண்டு காலச் சாதனைகளைச் சொல்லி வாக்குகளைக் கேட்க வேண்டும். அதை விட்டுவிட்டு இன்னொரு கட்சித் தலைவர்களான எம்.ஜி.ஆரையும், ஜெயலலிதாவையும் புகழ்ந்து விட்டுச் சென்றுள்ளார். தனது ஆட்சியில் சொல்லிக் கொள்ள ஏதும் இல்லாததால் அவருக்கு ஊன்றிக் கொள்ள எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தேவைப்பட்டுள்ளார்கள்!

அடுத்த பிரதமராக ஜெயலலிதா ஏதோ போட்டியிடப் போவது போல அவரைப் புகழத் தொடங்கி இருக்கிறார் மோடி. “வளர்ச்சியை உருவாக்கியது குஜராத் மோடியா? இந்த லேடியா?” என்று மோடியை எதிர்த்து பிரச்சாரம் செய்து 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜக.வைத் தோற்கடித்தவர் ஜெயலலிதா. அந்த ஜெயலலிதாவைப் பாராட்டி பேசத் தொடங்கி இருக்கிறார் மோடி. அவருக்கு கடந்த காலமே மறந்து விட்டது போலும்!

2016 சட்டமன்றத் தேர்தலின் போது ஜெயலலிதாவுக்கு எதிராக இதே மோடிதான் பிரச்சாரம் செய்தார். அப்போது ஒசூரில் பொதுக்கூட்டம் பேசிய மோடி, அ.தி.மு.க. ஆட்சியை ஊழல் மலிந்த ஆட்சி என்று குற்றம் சாட்டினார்.

**“பா.ஜ.க.வுக்கு அனைவரும் வாக்களியுங்கள். ஒவ்வொரு முறையும் அம்மாவிடம் (ஜெயலலிதா) கோபித்துக் கொண்டு அய்யாவுக்கு (கலைஞர்) வாக்களிப்பீர்கள். அல்லது அய்யாவிடம் கோபித்துக் கொண்டு அம்மாவுக்கு வாக்களிப்பீர்கள். மாற்று சக்தி இல்லை. ஒரு முறை கிணற்றில் விழுந்தால் அடுத்த முறை ஏரியில் விழுவீர்கள். இப்போது பா.ஜ.க. என்ற மாற்று சக்தி உங்களுக்கு கிடைத்து விட்டது. இப்போதைய ஆட்சியில் (அ.தி.மு.க.) லஞ்சலாவண்யம் தலைவிரித்தாடுகிறது. தமிழ்நாடே இதனால் பாதிக்கப்பட்டு விட்டது. லஞ்சம் வாங்குபவர்கள் கையில் ஆட்சி இருக்கிறது” என்று பேசினார் அன்றைய மோடி.**

அத்தகைய ஜெயலலிதாவைத்தான் சிறந்த ஆட்சி கொடுத்ததாக இப்போது புகழ்கிறார் பிரதமர் மோடி.

2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இங்கே பரப்புரை செய்ய வந்த அமித்ஷா, ‘அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும்’ என்று பேசினார். திருச்சியில் பேசிய அமித்ஷா, ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கினார். “இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசாங்கம் ஜெயலலிதாவின் அரசாங்கம்தான்” என்றார். “மே 16 ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுங்கள் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்” என்று பேசினார்.

**“அ.தி.மு.க. அரசு, தமிழகத்துக்கு ஒன்றிய அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களை நிராகரித்தும், செயல்படுத்தாமலும் கிடப்பில் போட்டுள்ளது. இதனால், தமிழகம் வளர்ச்சி காணாமல் ஊழல் மலிந்து காணப்படுகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும்”** என்று பட்டுக்கோட்டையில் பேசினார் அமித்ஷா. **“இந்தியாவின் மிகவும் ஊழல் நிறைந்த ஜெயலலிதாவின் அரசாங்கத்தை மக்கள் மாற்றி, பா.ஜ.க.வுக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும்”** என்றுதான் போகும் இடமெல்லாம் பேசினார். அன்று பேசியதற்கு எதிராக இன்று பேசுகிறார்கள்.

அண்ணாமலையிடம் கேட்டால் தெரியுமே ஜெயலலிதாவைப் பற்றி. 1991-96 ஆண்டுகளில் தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர் ஜெயலலிதா. அவரது ஆட்சிகாலம் ஊழலில் மிக மோசமான காலக்கட்டமாக இருந்ததா என்று ஒரு ஆங்கிலப் பத்திரிகை கேட்கிறது. அப்போது அண்ணாமலை, **“தமிழகத்தில் பல நிர்வாகங்கள் ஊழல் மலிந்தன. முன்னாள் முதல்வர்கள் நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுள்ளனர். அதனால்தான் தமிழகம் ஊழல் மிகுந்த மாநிலமாக மாறியுள்ளது. ஊழலில் நம்பர் ஒன் என்று சொல்வேன்,”** என்றார்.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறைக்குப் போனவர் - பதவியை இழந்தவர் ஜெயலலிதா மட்டும்தான். அவரது பெயரைச் சொல்லாமல் சொல்லி இருந்தார் அண்ணாமலை. இந்தப் பேட்டிக்கு எதிராக அ.தி.மு.க. கொந்தளித்ததே. அ.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் போடப்பட்டதே. இது பிரதமர் மோடிக்குத் தெரியாதா?

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உடைப்புக்கு அடிப்படையாக அமைந்ததே, ஜெயலலிதாவை ஊழல்வாதி என்று அண்ணாமலை சொன்னதால் தானே? இது கூடத் தெரியாமல் அண்ணாமலை நடத்திய விழாவில், அண்ணாமலை தலையில் மண்ணை போட்டு விட்டாரே பிரதமர்.

**வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்ததே ஜெயலலிதா என்பது மோடிக்கு தெரியுமா?**

1998 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அ.தி.மு.க. கூட்டணியில்தான் பா.ஜ.க. இருந்தது. அமைச்சரவை அமைக்குமாறு வாஜ்பாய்க்கு குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்த பிறகும், பா.ஜ.க.வுக்கு ஆதரவுக் கடிதத்தை ஜெயலலிதா தரவில்லை. யார் யாருக்கு என்ன துறை வழங்க வேண்டும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்தார். அதனை வாஜ்பாய் ஏற்கவில்லை. ‘அ.தி.மு.க. கூட்டணிக்கு நிதி துறையை ஒதுக்குவதில் பிரச்சினை இருக்கிறது’ என்று வாஜ்பாய் வெளிப்படையாக பேட்டியே கொடுத்தார். இரண்டு கட்சிக்கும் பேச்சுவார்த்தை நடந்தது.

‘ஆட்சி அமைக்க பா.ஜ.க.வுக்கு ஆதரவு தருகிறோம். ஆதரவுக் கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்போம். ஆனால் அமைச்சரவையில் சேர மாட்டோம்’ என்று ஜெயலலிதா அறிக்கை விட்டார். சில மாதங்கள் கழித்ததும் ஜெயலலிதா இறங்கி வந்து அமைச்சரவையில் சேர்ந்து கொண்டார். தம்பிதுரை, சேடப்பட்டி முத்தையா, ஆர்.கே.குமார், கடம்பூர் ஜனார்த்தனம் ஆகியோர் அமைச்சர்கள் ஆனார்கள். அமைச்சரவையில் இணைந்த பிறகும் பா.ஜ.க.வுக்கு அவர் கொடுத்த குடைச்சல்கள் அதிகம்.

ஓராண்டுகள் கழிந்த நிலையில், பா.ஜ.க. அரசுக்கு கொடுத்த ஆதரவை திரும்பப் பெற்றார் ஜெயலலிதா. அ.தி.மு.க. சார்பில் இடம் பெற்றிருந்த அமைச்சர்கள் திடீரென பதவி விலகினார்கள். கடற்படை ராணுவத் தளபதி விஷ்ணு பகவத்தை டிஸ்மிஸ் செய்த காரணத்தை எனக்குச் சொல்லவில்லை என்று சொன்னார் ஜெயலலிதா. அமைச்சரவையில் இருந்து ஜார்ஜ் பெர்னாண்டஸை நீக்கச் சொன்னார். அ.தி.மு.க. அமைச்சர்கள் இல்லாமலேயே அமைச்சரவைக் கூட்டத்தை பிரதமர் வாஜ்பாய் கூட்டிய கூத்தெல்லாம் அப்போது நடந்தது. மாற்று அரசை அமைக்கப் போவதாகச் சொல்லி டெல்லிக்கு ஜெயலலிதா போனார். வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்க்க டெல்லி சென்றார் ஜெயலலிதா. குடியரசுத் தலைவரைச் சந்தித்து பா.ஜ.க. ஆட்சிக்கு தந்த ஆதரவை திரும்பப் பெறுவதாகக் கடிதம் கொடுத்தார். இதனால் வாஜ்பாய் அரசு, பெரும்பான்மையை இழந்தது.

**பெரும்பான்மையை நிரூபிக்க குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். 17.4.1999 அன்று ஒரு வாக்கு வித்தியாசத்தில் வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது. வாஜ்பாய் அரசைக் கவித்த ஜெயலலிதாவைத் தான் புகழ்ந்து தள்ளுகிறார் மோடி.**

**தொடரும்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் 210 கோடியே 75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் கட்டடங்களை திறந்து வைத்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் அமையவுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் கோ. பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமாரவேல்பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (28.02.2024) முகாம் அலுவலகத்தில், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவர குறிப்பு மைய அலுவலகத்திற்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட 10 உதவி புவியியலாளர்கள் பணியிடத்திற்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திண்டுக்கல் மாவட்டம் - காளாஞ்சிபட்டியில் - ரூ.10.15 கோடியில்

# கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 1-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிபட்டியில் 10 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித்தேர்வு பயிற்சி மையத்தை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த படித்த ஏராளமான இளைஞர்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள தன்னார்வலர்கள் மூலம் நடைபெறும் பயிற்சி மையங்களுக்குச் சென்று, திறந்தவெளியில் போதிய அடிப்படை வசதிகளின்றி படித்து வருகின்றனர்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளும் வகையிலும், அதிக எண்ணிக்கையில் அரசுப் பணிகளில் தேர்ச்சி பெற்றிடும் வகையிலும், பாதுகாப்பான, காற்றோட்டமான வசதியுடன் தரமான பயிற்சியினை ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கிடும் வகையிலும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளஞ்சிபட்டியில் 4 ஏக்கர் பரப்பளவில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் அமைத்திட, 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளுக்கான “நமக்கு நாமே” திட்டம் மூலம் 7 கோடியே 65 இலட்சம் ரூபாயும், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்களின் 2022-23ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 கோடி ரூபாயும், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ அவர்களின் 202223ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 கோடியே 50 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 10 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பயிற்சி மையத்தின் தரைத்தளத்தில், 5608 சதுர அடி பரப்பளவில் 2 பயிற்சி வகுப்பறைகள், பணியாளர் அறை, பயிற்றுநர் அறை, கணினி ஆய்வகம், நூலகம், வாகனங்கள் நிறுத்துமிடம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள் மற்றும் 5985 சதுர அடி பரப்பளவில் 1000 நபர்கள் அமரும் வசதி கொண்ட குளிரூட்டப்பட்ட கருத்தரங்கக்கூடமும், முதல்தளத்தில் 3896 சதுர அடி பரப்பளவில் கணினி நூலகம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக உணவருந்தும் கூடமும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், உட்புற சாலை வசதிகள், இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், சுற்றுச்சுவர் மற்றும் தடுப்புச் சுவர் வசதிகள், நுழைவு வாயில், குடிநீர் வசதி, புல்வெளி மற்றும் தோட்ட அலங்கார வசதிகள் போன்ற அனைத்து வசதிகளுடன் பாதுகாப்பான சூழலில் படிக்கும் வகையில் இப்பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையத்தில், ஒன்றிய மாநில அரசுத் தேர்வாணையங்களது ஆண்டுத்திட்ட நிரல்களின்படி நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும் தேர்ந்த பயிற்றுநர்கள் மற்றும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு ஆண்டு முழுவதும் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

தேர்வுகளுக்கான பாடத்திட்டங்களுக்கேற்ப ஆயிரக்கணக்கான சிறந்த பாடப்புத்தகங்கள் கொண்ட நூலகமும், மின் நூல்கள் கொண்ட மின் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், போட்டித்தேர்வர்கள் பயன்பெறும் வகையில் முன்னணி நாளிதழ்கள், வார இதழ்கள் மற்றும் மாத இதழ்கள் பெறப்பட்டு நூலகத்தில் பராமரிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ப. வேலுச்சாமி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைத்து சிறப்புரை !

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா !

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள்!

*திருச்சி, மார்ச் 1-*

*திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா குறித்து மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் வருமாறு:-*

*கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மிக சிறப்பாக திருச்சி தெற்கு மாவட்டத்தில் வருடம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இதுவரை 90 நிகழ்ச்சிகள் முடிக்கப்பட்டு தற்போது 91வது நிகழ்ச்சியானது, கலைஞர் நூற்றாண்டு விழாவில் மற்றொரு நிகழ்வாக சட்டமன்ற தொகுதிக்கு ஒரு சிலை என்ற அடிப்படையில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் மணப்பாறை தொகுதியில் இன்று (01.03.2024 வெள்ளிக்கிழமை) மாலை 03.30 மணிக்கு மணப்பாறை மாட்டுசந்தை அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைக்கிறார். விழாவுக்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு முன்னிலையிலும் எனது தலைமையிலும் நடைபெற உள்ளது.*

*இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர் கழக சேர்மன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.*



*இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*





சென்னை, கிண்டி, போக்குவரத்து ஆணையரகத்தில், நேற்று முன்தினம் (28.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், போக்குவரத்துத் துறை சார்பில் 41.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரக புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திரரெட்டி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.